**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 126 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 6** |
| **Name** | : | **திரு. ரமேஷ்** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.12.2023**

எதிரி 1 ஆஜர். எதிரிகள் 2 முதல் 4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை தெற்குவாசலில் குடியிருந்து வருகிறேன். தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கியில் வேலை செய்கிறேன். ஆஜர் 1 வது எதிரியைத் தெரியும். எனது தாய் மாமா சந்திரசேகர், அவரது மூத்தமகள் பொன்மலர் என்பவருக்கு தூத்துக்குடி மாவட்டம் நகலாபுரத்தைச் சேர்ந்த ஆஜர் 1 வது எதிரியைத் கடந்த 2005 ம் வருடம் நவம்பர் முதல் வாரத்தில் திருமணம் செய்து கொடுத்தோம். நான் அந்த திருமணத்தின் நிச்சியதார்த்தம், திருமணம் ஆகிய விழாக்களுக்குச் சென்றிருந்தேன். திருமணத்தின் போது, பெண் வீட்டார் 100 பவுன் நகை, 2 ½ லட்சம் மதிப்புள்ள வெள்ளி பொருட்கள், பணம் 1 லட்சம் ரொக்கமாக கையில் கொடுத்தார்கள். அது போக, தேவையான சீர்வரிசைப் பொருட்கள் திருமணத்தின் போது கொடுத்தார்கள். ஆஜர் 1 வது எதிரி பெங்களுரில் IT Company யில் வேலை பார்ப்பதாகச்

சொன்னார்கள். எந்த கம்பெனி என்று தெரியாது. திருமணம் முடிந்து 1 வது எதிரியும், பொன்மலரும் சேர்ந்து வாழ்ந்த கொஞ்ச நாளில், 1 வது எதிரி வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக என் மாமா அசா1 என்னிடம் சொன்னார். நாங்கள் கூப்பிட்டு சமரசமாகப் பேசி அனுப்பி வைத்தோம். திரும்பி சென்ற அன்றைய இரவே மறுபடியும் அதே அடி, தடி சண்டை ஏற்பட்டதாக என் மாமா அசா1 என்னிடம் சொன்னார். அதற்குப் பிறகு பொன்மலர் பெங்களுரில் இருக்கும் போது அதிகமாக தூக்கமாத்திரை சாப்பிட்டு அங்குள்ள அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 3 நாட்கள் இருந்ததாக என் மாமா அசா1 என்னிடம் சொன்னார். அதற்கு பிறகு கேட்கும்போது வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்கு போட்டு அதுவும் நடந்து வருவதாக அசா1 என்னிடம் சொன்னர். அதற்கு பிறகு பொன்மலர் மதுரை, தவிட்டுச்சந்தையில் உள்ள அசா1ன் வீட்டில் வைத்து, மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து தற்கொலை செய்து கொண்டதாக 4 மணி நேரம் கழித்து நான் வங்கியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது என் மாமா அசா1 சொன்னார். நான் அவரது இறுதி சடங்கிற்கு சென்றிருந்தேன். அதற்கு அடுத்த நாளுக்கு அடுத்த நாள் காவல் உதவி ஆணையர் என்னை கூப்பிட்டு விசாரித்தார்கள்.

## <u>குறுக்கு விசாரணை (1 வது எதிரி தரப்பில்) :</u>

அசா1 சொல்லித்தான், வரதட்சணையாகக் கொடுத்த பொருட்கள் பற்றிய விபரங்கள், வரதட்சணை கேட்டு நடந்த பிரச்சனைகள் அனைத்தும் என் மாமா அசா1 சொல்லித்தான் தெரியும். போலிசார் என்னை விசாரித்த தேதி என்னவென்றால் பொன்மலர் தற்கொலைக்கு 2 நாட்களுக்குப் பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள். தேதி சரியாக ஞாபகம் இல்லை, நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன சங்திகளை போலிசார் என்னை விசாரிப்பதற்கு முன்னர் நான் யாரிடமும் சொல்லவில்லை. நான் சொன்ன சங்கதிகளை போலிசார் எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து போட்டேனா என்று ஞாபகம் இல்லை. போலிசார் விசாரணையில் "திரும்பி

சென்ற அன்றைய இரவே மறுபடியும் அதே அடி, தடி சண்டை ஏற்பட்டதாக என் மாமா அசா1 என்னிடம் சொன்னார்" என்ற விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். நாங்கள் கூப்பிட்டு சமரசமாகப் பேசி அனுப்பி வைத்தோம் என்றால் என் மாமா அசா1ன் வீட்டில் வைத்து பேசினோம். பஞ்சாயத்தாக பேசவில்லை. அம்மா, அப்பாவை வைத்து பேசினோம். எந்த தேதி, மாதம், வருடத்தில் சமரசம் பேசினோம் என்று ஞாபகம் இல்லை. 1 வது எதிரியின் அப்பா, அம்மா தவிர வேறு ஆட்கள் யாரும் சமரசம் பேச வரவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், நான் சொன்னது போல், பணம், நகை , பொருட்கள் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அசா1 எனது உறவினர் என்பதால் சாட்சி வேண்டும் என்பதற்காக இந்த வழக்கில் என்னை சாட்சியாகச் சேர்த்துள்ளார்கள் என்றும் அசா1க்கு ஆதரவாக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (2 முதல் 4 எதிரிகள் தரப்பில்) :</u>**

1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

## IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 126 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 7** |
| **Name** | : | **திரு. பிரகஸ்பதி** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.12.2023**

எதிரி 1 ஆஜர். எதிரிகள் 2 முதல் 4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் விருதுநகர் மாவட்டம், பேட்டைத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் முனிசிபல் அலுவலகத்தில் மேனேஜராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்றுள்ளேன். ஆஜர் 1 வது எதிரியைத் தெரியும். அவர் பொன்மலரின் கணவர் ஆவார். பொன்மலர் எனது மைத்துனர் சந்திரசேகரனின் மகள் ஆவார். 1 வது எதிரிக்கும் பொன்மலருக்கும் எந்த தேதியில், எந்த வருடத்தில் எந்த மாதத்தில் எந்த கிழமையில் நடந்தது என்று ஞாபகம் இல்லை. நான் அந்த திருமணத்திற்குச் சென்றிருந்தேன். திருமணத்தின் போது., மாப்பிள்ளைக்கு பணம் 1 லட்சம் கொடுத்தார்கள். பொண்ணுக்கு 100 பவுன் நகையும், 2 ½ லட்சம் பெறுமானமுள்ள வெள்ளி பொருட்களும், சீர்வரிசை பொருட்களும் கொடுத்தார்கள். மாப்பிள்ளை (1 வது எதிரி) பெங்களூரில் Software company யில் வேலை பார்த்தார். திருமணம் முடிந்து 1 வது எதிரியும், பொன்மலரும் பெங்களூரில் வசித்து

வந்தார்கள். 1 வது எதிரி கூடுதலாக பணம், பொருள் கேட்டு பொன்மலரை வன்கொடுமை செய்தார்கள். நான் நேரில் வந்து பார்த்தபோது, பொன்மலரிடம் கேட்டேன். மாப்பிள்ளையின் கொடுமை தாங்காமல் பொன்மலர் பெங்களூரில் தூக்கமாத்திரை சாப்பிட்டு அங்கு மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள். எனது மைத்துனர் அசா1 பெங்களூரு சென்று பொன்மலரை கூட்டி வந்தார். பொன்மலர் மதுரையில் இருந்த போது, நான் நேரில் சென்று பார்த்து, இப்படியெல்லாம் இருக்கக்கூடாது என்றும் மாப்பிள்ளையுடன் சேர்ந்து இருக்க வேண்டும் என்றும் நான் அவருக்கு ஆலோசனை சொன்னேன். திருப்பி பொன்மலரை அசா1 பெங்களூரில் கொண்டு போய் விட்டார். அப்பவும் அந்த பெண்ணின் கணவர் (1 வது எதிரி) மீண்டும் நகை, பணம் கேட்டு தொல்லை கொடுத்ததால் மிகவும் மனம் உடைந்து வருத்தப்பட்டிருந்ததால் மீண்டும் கோர்ட்டுக்கு போய்விட்டு வீட்டிற்கு வந்து மனம் மிகவும் வேதனைப் பட்டு அவள் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டாள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (1 வது எதிரி தரப்பில்) :</u>

அசா1 சந்திரசேகரின் உடன் பிறந்த அக்கா தமிழரசி தான் என் மனைவி ஆவார். நான் விருதுநகரில் குடியிருந்து வருகிறேன். அசா1 மதுரையில் குடிருந்து வருகிறார். எங்கள் நாடார் சமூகத்தில் திருமணம் செய்யும் போது, பெண் வீட்டார் என்ன சீர் செய்கிறார்கள் என்றும் மாப்பிள்ளை வீட்டார் என்ன செய்கிறார்கள் என்ன நகை போடுகிறார்கள் என்று எழுதிக்கொள்வதுண்டா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. விருதுநகர் நாடார்களுக்கு என்று தனியாக சங்கம் உண்டு என்றால் அமைப்புகள் உள்ளது. அதேபோல், சிவகாசி, திருநெல்வேலி, மதுரை போன்ற ஊர்களுக்கு நாடார் உறவின்முறை உண்டு என்றால் சரிதான். நான் எந்த உறவின் முறையினைச் சார்ந்தவர் என்றால் நான் எதில் இல்லை. அசா1 எந்த உறவின்முறையில் இருக்கிறார்

என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. திருமணம் நடந்தால், திருமணம் குறித்தும் செய்முறை குறித்தும் நாடார் உறவின்முறையில் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். நாடார் உறவின்முறையில் சீர் வரிசை பொருட்கள் கொடுத்தல், வரதட்சணை போன்றவற்றில் பிரச்சனை நடந்தால் நாடார் உறவின்முறையில் மனு கொடுத்து பஞ்சாயத்து செய்வார்கள் என்றால் அது பற்றி தெரியாது. அந்த பஞ்சாயத்தில் தீர்ப்பு சொல்வார்கள் என்றும் அதன்படி செய்யவில்லை என்றால் நாடார் உறவின்முறையில் இருந்து தள்ளி வைத்துவிடுவார்கள் என்றாலும் அது பற்றி எனக்குத் தெரியாது. பணம் கொடுத்தது, நகை போட்டது, சீர் செய்தது, வெள்ளிப் பாத்திரங்கள் கொடுத்தது போன்ற விபரங்கள் அசா1 சொல்லித்தான் எனக்குத் தெரியும். போலிசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சம்மன் கொடுத்து மதுரைக்கு வரச்சொல்லி என்னை விசாரித்தார்கள். தேதி, மாதம், வருடம் தெரியாது. போலிசார் விசாரணையில் "1 வது எதிரி கூடுதலாக பணம், வரதட்சணை கேட்டு வன்கொடுமை செய்தார்கள் என்றும் நேரில் வந்து பார்த்தபோது, நான் நேரில் வந்து பார்த்தபோது, பொன்மலரிடம் கேட்டேன் என்றும் மாப்பிள்ளையின் கொடுமை தாங்காமல் பொன்மலர் பெங்களுரில் தூக்கமாத்திரை சாப்பிட்டு அங்கு மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள் என்றும் எனது மைத்துனர் அசா1 பெங்களுரு சென்று பொன்மலரை கூட்டி வந்தார்" என்றும் சொல்லியுள்ளேன். மேற்படி சம்பவங்கள் நடந்த தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. நான் பெங்களுரு சென்றதில்லை. போலிசார் விசாரணையில் " நான் ஆலோசனை சொன்ன பிறகு, பொன்மலரை அசா1, பெங்களுரு சென்று விட்டார் என்றும் அப்பவும் அந்த பெண்ணின் கணவர் (1 வது எதிரி) மீண்டும் நகை, பணம் கேட்டு தொல்லை கொடுத்ததால் மிகவும் மனம் உடைந்து வருத்தப்பட்டிருந்ததால் மீண்டும் கோர்ட்டுக்கு போய்விட்டு வீட்டிற்கு வந்து மனம் மிகவும் வேதனைப் பட்டு இருந்தாள்" என்றும் சொல்லியுள்ளேன். நான்

பொன்மலரிடம் கேட்டது, கேள்விப்பட்டது எல்லாம் மதுரையில் வைத்துதான். நான் மதுரைக்கு எந்த தேதி, மாதம், வருடத்தில் வந்தேன் என்று ஞாபகம் இல்லை. நான் சொன்னது போல், சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் பொன்மலரிடம் நான் பேசவில்லை என்றும் அவர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றும், நான் எதுவும் கேள்விப்படவில்லை என்றும் எதிரிகள் வரதட்சணையாக பொருளோ, நகையோ கேட்கவில்லை என்றும் உறவு முறையின் அடிப்படையில் என்னை சாட்சியாகப் போட்டு, சொல்லிக்கொடுத்து அசா1 க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (2 முதல் 4 எதிரிகள் தரப்பில்) :</u>**

1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை